**தலைப்பு 161 – வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திரட்டிய பரீட்சை மீதியின் படி தனியார் படிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 136,077,087 ஆக இருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றின் படி அக்காசு பாய்ச்சல் ரூபா 173,151,502 ஆக இருந்தமையினால் ரூபா 37,074,415 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திரட்டிய பரீட்சை மீதியின் படி தனியார் படிகள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 136,077,087 ஆவதுடன் அதனை தெளிவாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றினுள் காசுப் பாய்ச்சல்களினை சரியாக இனங்கண்டு கொள்ளப்பட வேண்டும். |

## (ஆ) மூலதன செலவினங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் தயாரிக்கப்பட்ட திரட்டிய பரீட்சை மீதியின் படி பௌதீக சொத்துக்களின் நிர்மாணிப்புக்களுக்காக கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளுக்காக ரூபா 2,797,481 செலவிடப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி அக்காசு பாய்ச்சல் ரூபா 39,871,896 ஆனதினால் ரூபா 37,074,415 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | நிதிச் செயற்பாட்டு கூற்றின் படி மூலதன செலவின வகைப்படுத்தலினை காட்டப்பட்டிருந்த போதிலும், நிதிக் கூற்றினை சமர்ப்பிக்கப்பட வேண்டிய படிவத்தில் நிறுவனத்தினால் பணம் மூலமாக மேற்கொள்ளப்பட்ட சகல மூலதன செலவினங்கள் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டியதுடன் அதன்படி ரூபா 39,871,896 ஆன மூலதனச் செலவினை காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றினுள் காசுப்பாய்ச்சல் களினை சரியாக இனங்கண்டு கொள்ளப்படல் வேண்டும். |

## (இ) வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றின் வைப்பு பெறுவனவுகள் மற்றும் வைப்புச் செலுத்தல்களுக்கான காசுப்பாய்ச்சல்கள் அமைச்சினால் தயாரிக்க்பட்ட திரட்டிய பரீட்சை மீதியினையொத்த மீதிகளுடன் ஒப்பீடு செய்கையில் ரூபா 30,350 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இப்பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் தவறுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்புக் பெறுவனவுகள் மற்றும் செலத்தல்கள் என குறிக்கப்படுவது விடப்பட்டுள்ளன. இது ஒட்டுமொத்த நிதிக்கூற்றுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தாது. அத்துடன் இதனகத்திற்குப் பிறகு இதுபோன்ற விட்டுவிடுகையினை மேற்கொள்ளாதிருக்கும் படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | 2021/03 ஆம் இலக்க பொதுக் கணக்குகள் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

**(ஈ) முற்பணக் கணக்கு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி இணக்கக்கூற்றில் ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிலையத்தினால் முற்பண பீ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 225,829 ஆன வரவினை அவ்வாறே காட்டப்படாது ஏனைய தலைப்புக்களுக்காக மெற்கொள்ளப்பட்ட செலவினங்களிலிருந்து கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன. | இந்த ரூபா 225,829 ஆன பெறுமதியினை நவம்பர் மாத முற்பண B கணக்கிற்காக உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட்ட பெறுவனவுகளாகும். அப்பெறுமதியினை தவறுதலாக வேறொரு அமைச்சின் செலவின தலைப்பில் செலவில் பதியப்பட்டுள்ளதுடன் அதனை திசெம்பர் மாத சம்பந்தப்பட்ட அமைச்சின் செலவின விடயமொன்றினை வரவு வைக்கப்பட்டு திருத்தப்பட்டமையினை அறியத் தருகின்றேன். | நிதிக் கூற்றுக்களில் கொடுக்கல் வாங்கல்கள் முறையாக முன்வைக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் 2021 வருடத்திற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 10 செலவின விடயங்களில் நூற்றுக்கு 18 முதல் நூற்றுக்கு 100 வரையிலான வீச்சில் சேமிப்பினை அவதானிக்கப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 31 அமைச்சரவை முடிவு, கொவிட் தொற்று நிலைமை, சாரதிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் அமைச்சிலிருந்து வெளியில் இடமாறிச் செல்லல் போன்ற காரணிகளினால் இச்சேமிப்பினை ஏற்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் முறையான திட்டமிடல், மற்றும் முகாமைத்துவத் துடன் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.2 வெளிநாட்டு உதவித் திட்டங்கள்

இலங்கை சுற்றாடல் முறைமைகளில் முகாமைத்துவம் மற்றும் மேம்படுத்தலின் மூலம் அச்சுற்றாடல் முறைமையினை பாதுகாப்பதன் ஊடாக மக்களுக்கு பிரதிபலன் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் (Eco System Conservation & Management) திட்டத்தினை அமைச்சின் கீழ் 2017 வருடம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இத்திட்டம் 45 மில்லியன் அமெரிக்க டொலருக்கான உலக வங்கிக் கடனுதவியில் 2021 வருடம் வரை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் பின்னர் அது 35 மில்லியன் அமெரிக்க டொலருக்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்தினை திட்டமிடுதல் மற்றும் செயலாற்றல் பற்றி கீழ் காணும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரிவின் படி 03 வருடங்களுக்காக அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதான பெறுகை திட்டத்தின் படி கடன் பணம் சம்பூரணமாக பாவனையாகும் படியான விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். இத்திட்டத்திற்கு ஆதாரமான கடன் தொகையான அமெரிக்க டொலர் 45 மில்லியன் அல்லது பின்னர் திருத்தப்பட்ட கடன் தொகையான 35 மில்லியன் அமெரிக்க டொலருக்காக அவ்வாறானதொரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டத்தினை ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிட்ட நோக்கங்களுக்கான படியான அதற்கான பெறுகை செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருப்பதுடன் உருப்படிகளுக்கான உலக வங்கிக் கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு தேவையான திருத்தங்களுடன் வருடாந்த பெறுகைத் திட்டத்தினை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 15 ஆந் திகதிய இலக்கம் 01/2019 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி 9 பந்தி மற்றும் திட்ட செயற்பாட்டு கையேட்டின் 2.1.1 பந்தியின் பிரகாரம் திட்டத்தினை அமுல்படுத்தும் குழுவொன்று (Project Steering Committee) அமைக்கப்படல் வேண்டும். | திட்ட செயற்பாட்டுக் குழுவில் தலைமை தாங்கப்பட வேண்டிய அமைச்சின் செயலாளர் பதவி 2020-2021 இரண்டு வருடங்களினுள் அடிக்கடி மாற்றமடைதல், பதவியின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருந்த ஏனைய உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டியமை மற்றும் கொவிட் 19 தொற்று | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இணைப்பு நிறுவனங்களுக்கான கொள்கை ரீதியிலான வழிகாட்டல்கள், வழங்குதல் மற்றும் ஒவ்வொரு நிறுவனங்களின் திட்ட அலுவல்களினை மேற்பார்வை செய்தல் குழுவின் காரியங்களாவதுடன் ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒரு முறையேனும் கூடி திட்டத்தின் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 வருடம் முதற்கொண்டு 2021 நவம்பர் மாதம் வரையிலும் சம்பந்தப்பட்ட குழு 06 முறை மாத்திரமே கூட்டப்பட்டிருந்தது. மேலும், மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி செயலாளரினால் முன்மொழியப்பட்ட பிரதிநிதி ஒருவர் ஆக இக்குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | நிலைமை காரணமாகவும் திட்ட செயற்பாட்டுக் குழு கூடுதல் கஷ்டமாக இருந்தது. | |
| (இ) | 45 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்த 04 அம்சங்களுக்கும் முறையாக ஒதுக்கிடு ஒதுக்கப்பட்டிருந்த இத்திட்டத்திற்கு பிறகு 35 மில்லியன் அமெரிக்க டொலர் வரை ஒதுக்கீடு குறைக்கப்பட்டு மீண்டும் திட்டத்தினை மாற்றம் செய்யப்பட்ட போது முக்கியம் வாய்ந்த சுற்றாடல் பாதுகாப்பினைக்காக ஆரம்ப முழு ஒதுக்கீட்டிற்கு நேரொத்த நூற்றுக்கு 38 சதவீதம் குறைக்கப்பட்டு | 45.0 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிவாய்ந்த ஒதுக்கீடு, அமெரிக்க டொலர் 35.0 வரை குறைவதற்கு காரணமாக இருந்தமை திட்டத்தினையோ அல்லது உலக வங்கியின் தேவைப்பாட்டினையினாலோ அல்ல. கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் குறைந்த ஜீவனாம்ச மட்டத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை பெணிச் செல்வதற்கு தேவையான அவசரப் பணத்தை | திட்டங்களை தயாரிக்கும் போது சுற்றாடல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களுக்காக முதலிடம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

நிறுவனத குறைக்கப்பட்டு நிறுவனத்திறன் மற்றும் முதலீட்டு கொள்ளளவினை அதிகரிப்பதற்கான அம்சத்திற்காக ஒதுக்கீட்டினை அமெரிக்க டொலர் மில்லியன் 6.6 இருந்து 17.88 வரையில் அதாவது திட்டப் பெறுமதியில் அரைவாசி அளவிற்கும் மேல், ஒட்டுமொத்த ஒதுக்கீட்டில் 51 சதவீதம் வரையில் நூற்றுக்கு 36 வீதம் வரையில் அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் திட்ட விழுமியங்களுக்கு ஏற்படும் தாக்கத்தினைப் பற்றி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு Project Steering Committee மூலம் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்படாது இவ்வாறாக திட்ட அம்சங்களுக்கிடையில் ஒதுக்கீடு மாறுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி திட்டத்தின் அடிப்படை நோக்கியையான சுற்றாடல் முறைமைகளின் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதன் மூலம் அச்சுற்றாடல் முறைமையினை பாதுகாக்கப்பட்டு அதன் மூலம் மக்களுக்கு பிரதிபலனினை பெற்றுக் கொடுக்கப்படும் எனும் முக்கிய நோக்கினை அடைந்து கொள்வது இயலாதுள்ளமையினை அவதானிக்கப்பட்டது.

தேவைப்பாட்டினைக்காக பல உலக வங்கித் திட்டங்களிலிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு திறைசேரி செயலாளரினால் உலக வங்கியிடம் விடுத்த கோரிக்கையின் பலனாக ஆகும். அதன்படி இனங்காணப்பட்ட சுமார் 60 செயற்பாடுகளை இரத்துச் செய்வதற்கு நேர்ந்ததுடன் அத்தருணத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நுவரஎலியா இலங்கை வன விஞ்ஞான நிறுவனம் மற்றும் கிரிதலை தேசிய வன ஜீவராசிகள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் சம்பந்தமான நிர்மாணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையினால் அதற்காக தேவைப்படும் ஒதுக்கீட்டினை ஒதுக்கி வைப்பது அவசியமாக இருந்தது. அதன்படி திறன் மற்றும் முதலீட்டு கொள்ளளவினை அதிகரிக்கும் படியான அம்சத்திற்காக அதற்கான ஒதுக்கீட்டினை அமெரிக்க டொலர் 6.6 மில்லியனிலிருந்து 17.88 மில்லியன் வரை மேல் சென்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் ரூபா 1,311 மில்லியன் பெறுமதி வாய்ந்த 75 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்படும் அதிகப்படியான திட்டங்கள் தற்போது முடிக்கப்பட்டுள்ளதுடன் மீதி | திட்டங்களுக்கு அமைவாக இலக்கிடப்பட்ட கருமங்கள் முடிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களினுள், ரூபா 671 மில்லியன் பெறுமதி வாய்ந்த 35 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதமாக அல்லது அதற்கு குறைந்த மட்டத்தில் இருப்பதுடன் கணக்காய்வுத் திகதியாகும் போது ரூபா 22 மில்லியன் பெறுமதிவாய்ந்த 07 திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. | திட்டங்களில் நூற்றுக்கு 75 வீதத்திற்கும் மேல் பௌதீக முன்னேற்றத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இரத்துச் செய்யப்பட்ட திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட பயன்பெறுனர் விருப்பத்தினை தெரிவிக்காமை, திட்டங்களுக்கான ஆரம்ப மதிப்பீடு அதிகமாக இருத்தல், திட்டங்கள் அதற்குரிய காலத்தினுள் முடிப்பதற்கு இயலாது போதல், மற்றும் அன்தூரியம் செய்கை பயிற்சி போன்ற திட்டங்களுக்கு சிறிய எண்ணிக்கையிலான பயன்பெறுனர் இருப்பதால் மக்களின் எதிர்ப்பினை ஆகிய விடயங்கள் காரணிகளாக இருந்தன. | |
| (உ) | வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் செயற்படும் ரூபா 878.76 மில்லியன் பெறுமதிவாய்ந்த 273 திட்டங்களுள் ரூபா 433.6 மில்லியன் பெறுமதி வாய்ந்த 106 திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீத பெறுமதியினைக்கும் கீழ் இருப்பதுடன் ரூபா 12.07 மில்லியன் பெறுமதி வாய்ந்த 05 திட்டங்களை இரத்துச் செய்தல் அக்கால எல்லையினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் செயற்பாடுகளில் தற்போதைக்கு குடவ உல்லாச மத்திய நிலையம் மற்றும் இலுக்கும்புற விடுதியில் மாத்திரம் நூற்றுக்கு 40 வீத முன்னேற்றத்தினை காணக்கூடியதாக இருப்பதுடன் ஏனைய சகல செயற்பாடுகளிலும் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் மேலான முன்னேற்றத்தினை காணக்கூடியதாக உள்ளது. | - மேற்படி - |
| (ஊ) | திட்ட முகாமைத்துவ அலகின் மூலம் செயற்படும் ரூபா 2,598 மில்லியன் பெறுமதிவாய்ந்த 34 திட்டங்களுள் 28 திட்டங்களுக்கான பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கும் 50 வீத கீழ் மட்டத்தில் இருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | தற்போதைக்கு அந்த 34 திட்டங்களில் 05 மாத்திரம் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் கீழ் மட்டத்தில் இருப்பதுடன் ஏனைய சகல திட்டங்களும் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் மேலாக பௌதீக முன்னேற்றத்தினை ஈட்டிக் கொண்டுள்ளது. நூற்றுக்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | 50 வீத முன்னேற்றம் இல்லாத சகல திட்டங்களும் நிர்மாணிப்பினை ஆவதுடன் இதனகத்திற்குப் பின்னர் அத்திட்டங்கள் யாவற்றையும் முழுமையாக முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| (எ) | அனுராதபுர மாவட்டத்தில் 13 கிராமங்களில் மின்சார வேலி நிர்மாணிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்த போதிலும் மூன்று கிராமங்களுக்கான மின்சார வேலி நிர்மாணிப்பது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதோடு மூன்று வேலிகளுக்கு மாத்திரம் உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அத்தோடு ஒரு மின்சார வேலியின் நிர்மாணிப்பினை மாத்திரம் முடிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே குருணாகல் மாவட்டத்தில் இனங்கண்டு கொள்ளப்பட்ட 25 பிரதேசங்களில் 15 கிராமங்களுக்கான சகல மின்சார வேலிக்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் மாதம் வரையிலும் 10 மின்சார வேலிகளின் நிர்மாணப் பணிகள் மாத்திரம் முடிக்கப்பட்டிருந்தன. | அனுராதபுரம் மாவட்டத்தில் மின்சார வேலிகளின் நிர்மாணிப்புக்கள் முடிக்கப்பட்டிருந்ததுடன்புதிய 05 மின்சார வேலிகளின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. நிலவிய கொவிட் 19 தொற்று நிலைமை மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து மரக் கம்பங்கள் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட தாமதமும் சில கிராமவாசிகள் இணங்கியவாறு நிதி மற்றும் உடல் உழைப்பிலான பங்களிப்பினை பெற்றுக் கொடுப்பதற்கு விரும்பாமையும் இத்தாமதத்திற்கு காரணமானது. | - மேற்படி - |
| (ஏ) | யால தேசிய பூங்காவின் மற்றும் ஊழியர் குழாமின் தேவைப்பாட்டினைக்காக நீர் வழங்கும் பொருட்டு நிர்மாணிக்கப்படும் 18 கிலோமீட்டர் நீளமான பீவீசீ குழாய் | விலை மனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மீள் முறையீடு காரணமாக ஏற்பட்ட தாமதங்கள் மற்றும் தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 5/2020 மூலம் பெற்றுக் | வெளிநாட்டு உதவித் திட்டங்களுக்காக பெறப்படும் கடன் நிதியினை செயற்திறனுடன் பயன்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | முறைமையினை நிர்மாணிக்கும் அலுவல்கள் 2019 வருடம் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ் வருடம் அதனை செய்யாது விடப்பட்டமையினால் 2021 வருடம் ஒரு கிலோ மீட்டருக்கு கிரயமாக ரூபா 1,438,759 அதிகரித்திருந்ததுடன் அதன்படி அக்கிலோமீற்றர் 09 ரூபா 12,948,831 மேலதிக செலவினமாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. | கொள்ளப்பட்டிருந்த ஆலோசனையின் படி செயற்படுத்துவதற்கு நேர்ந்தமையினால் ஏற்பட்ட தாமதம் இதற்கான காரணிகளாகும். | வேண்டும். |
| (ஐ) | மேற்படி குழாய்த் திட்டத்தில் குழாய்களினை பரப்புதலுக்காக (உருப்படி 01) பற்றுச்சீட்டு இலக்கம் 03 வரை ஒன்று திரப்பட்ட அளவினையாக 19,169 மீட்டருக்கு ரூபா 29,137,062 தொகையினை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும் அச்செலுத்தல்களினை மேற்கொள்ளும் போது மேற்படித் திட்டத்தில் நீர் குழாய்களினை பரப்புக்கள் சாத்தியமான முறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும் பரீட்சிக்கும் பொருட்டு SIDA/SCA/3/2 5.43 படி Hydraulic Pressure Test (அழுத்த பரிசோதனை) மேற்கொள்வது கட்டாயமாக்கப்பட்டு இருப்பினும் மேற்படி செலுத்தல்களினை மேற்கொள்ளும் போது அழுத்த பரிசோதனை சான்றிதழினை பரீட்சிக்கப்படாது 11,123 மீட்டர் அளவினைக்கு ரூபா 16,906,960 செலுத்தப்பட்டிருந்தது. | அழுத்தப் பரிசோதனைக்கு பிறகு செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் உரிய தரத்திற்கமைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சில் 28 வெற்றிடப் பதவிகள் நிலவியதுடன் அவற்றில் 18 சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளும் 01 மூன்றாம் மட்டத்திலான பதவியும் 08 இரண்டாம் மட்டத்திலான பதவிகளும் 01 ஆரம்ப மட்டத்திலான பதவியும் நிலவியதுடன் 01 ஆரம்ப மட்டத்திலான மேலதிக பதவியும் நிலவியது. | ஊழியர் ஆட்சேர்ப்பினை மட்டுப்படுத்தப்பட்டுள்ள மையினால் சம்பந்தப்பட்ட வெற்றிடங்களினை நிரப்புவதற்கான அலுவல்கள் தாமதமாகி உள்ளதுடன் வெற்றிடங்களுக்கான உத்தியோகத்தர்களினை இணைத்துக் கொள்வதற்காக ஒன்றுதிரட்டப்பட்ட சேவைகளுக்கான பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |